அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 30/95

எனது இல. 11/309 ஈ 101
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7
1995, ஒக்டோபர் மாதம் 30 ஆந் திகதி

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

கீழுழைப்புச் சேவை பட்டதாரிகளுக்கு நிவாரணமளிப்பதற்காக வெளியிடப்பட்ட 20/94 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி உயர்சம்பளம் பெற்ற உத்தியோகத்தர்கள் பழைய பதவிகளில் தொடர்ந்தும் சேவையாற்றுவதால் அவர்களுக்கு மேலதிக நேர படியும் விடுமுறை நாள் சம்பளமும் வழங்கல்.

---

எழுதுநர் மற்றும் நடுநிலை சேவைகளில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது 1994.06.15 ஆந் தேதிய 20/94 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மூலம் உயர் சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்தப்பட்ட பட்டதாரிகள் தகுந்த வேறு பதவிகளுக்கு நியமிக்கப்படும் வரை தொடர்ந்தும் பழைய பதவிகளிலே சேவையாற்றுவதற்கு இடமளிக்கப்படுவார்கள்.

அத்தகைய உத்தியோகத்தர்கள் தமது நித்திய அரசகரும நேரங்களுக்கு மேலதிகமாக சேவையாற்றுவதாயின் அவர்கள் வகிக்கின்ற பதவிகளுக்குரியதான மேலதிக நேரப் படிகள் வழங்கப்படும் அளவுகளை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர படிகளை கணித்து கொடுப்பனவு செய்ய வேண்டும்.

இந்த ஏற்பாடுகள் 1995 ஆகஸ்ட் மாதம் 16 ஆந் திகதி தொடக்கம் செயற்படும்.

ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.